செ.வெ.எண்-30 நாள்-14.10.2020

# அரியலூர் மாவட்டத்தில் வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணியினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், நகராட்சிக்குட்பட்ட ஏரிகளில் மனிதவள மேம்பாட்டு திட்டத்தின் சார்பில் அல்லிநகரம் ஓடை அணைக்கட்டிலிருந்து அரசநிலையிட்டா ஏரி, குறிஞ்சான் குளம் ஏரிக்கு வரும் வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணியினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (14.10.2020) துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்தாவது :-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் குடிமராமத்துத் திட்டம் அறிவிக்கப்பட்டு, நீர்நிலைகளில் தூர்வாரி, கரைகள் பலப்படுத்தப்பட்டு, கலுங்குகள் மற்றும் மதகுகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக விவாசயிகளுக்கு விவசாய பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான நீர் ஆதாரம் உறுதி செய்யப்படுவதுடன், பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் கிடைப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அதன்டி, அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினையொட்டி, பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, நகராட்சி பகுதிகளில் உள்ள அரசநிலையிட்டா, குறிஞ்சான்குளம் ஏரிகளில் அல்லிநகரம் ஓடை அணைக்கட்டிலிருந்து வரத்து வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுவதற்கு ஏரிகளில் தூர் வாரும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டது.

அல்லிநகரம் ஓடை அணைக்கட்டானது 27.25 மீட்டர் நீளமும், 1.20 மீட்டர் உயரமும் உடையது. தலைமதகிலிருந்து வாய்காலுக்கு அதிகபட்சமாக 207.62 கன அடி நீர் செல்கிறது. இதில் வரத்துவாய்க்கால் 1785 மீட்டர் நீளமும், 3.00 மீட்டர் அகலமும் உடையது. வரத்துவாய்க்கால் மூலம் அதிகபட்சமாக 132.77 கன அடி நீர் எடுத்து செல்கிறது. மேலும், அரசநிலையிட்டா ஏரி மற்றும் குறிஞ்சான் குளம் ஏரியின் கரை 1635 மீ நீளமும், 18.40 மீட்டர் உபரி நீர் வழிநீர் வழிந்தோடி செல்கிறது. ஏரியின் கொள்ளளவு 9.43 மி.க.அடியும், பரப்பளவு 21.53 ஹெக்டேரும் உடையது. இதன் மூலம் 122 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதற்கும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இப்பணிகள் விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், ஒட்டக்கோவில் பெரிய ஏரியின் கரை பகுதிகளில் சுற்றிலும் ஊராட்சி மற்றும் தன்னார்வலர்கள் சார்பில் 5000 பனை விதைகள் நடும் நிகழ்வில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில், மரக்கன்றுகள் நட்டு, துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், பொதுமக்கள் சுற்றுச்சூழலை பேணிக்காப்பதற்கு நீர், நிலம், காற்று ஆகியவற்றை மாசுபடுதலிலிருந்து தவிர்க்க வேண்டும். மரங்கள் வளர்ப்பதினால் சுற்றுச்சூழல் மாசுப்படுவதை தவிர்க்கப்படுகிறது. பொதுமக்கள் தங்களது கிராமங்களிலும் ஏரி, குளம், குட்டை ஆகியவற்றில் இதுபோன்ற பனை விதைகள், மரக்கன்றுகள் வளர்த்து, சுற்றுச்சூழல் பெருக பராமரித்து பேணிகாக்க வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) தட்சணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் வேல்முருகன், கோட்டாட்சியர் ஜோதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, நகராட்சி ஆணையர் குமரன், வட்டாட்சியர் சந்திரசேகரன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**